# ஓசூருமில்லை, பரந்தூரையும் இழந்தால் நம் தொழில் வளர்ச்சி எங்கே போகும்?

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி! 3ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்தச் சூழ்நிலையில், பரந்தூரிலேயே விமான நிலையத்தை அமைப்பதுதான் மிகச் சரியான முடிவாக இருக்கும். ஆனால், இதை நீங்கள் அரசியல் காரணங்களுக்காக இன்றைக்கு மாற்றுகிறீர்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

ஒரு திட்டம் நாட்டிற்கு வரும்போது, அதில் அரசியல் செய்யக்கூடாது. அரசியல் காரணங்களுக்காக ஏதேனும் திட்டங்கள் நிறுத்தப்படு கின்றன என்றால், அது நம்முடைய பொருளாதாரத்தையே பாதிக்கும். ஏற்கனவே அதிமுக ஆட்சியில், துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரையிலான திட்டம் அரசியல் காரணங்களுக்காக நிறுத்தப்பட்டது. மீண்டும் நம்முடைய கழக ஆட்சியில்தான் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இதுபோன்று பல்வேறு சூழ்நிலைகளில் அரசியல் காரணங்களுக்காக திட்டங்களை நிறுத்தினால், அது ஒட்டுமொத்த நாட்டினுடைய பொருளாதாரத்தையும் பாதிக்கும்.

எனவேதான் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால், அரசு அரசியல் நோக்கங்களைக் கடந்து சிந்திக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தில், இன்றைக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள்கூட ஏறத்தாழ 90 சதவீதம் முடிந்துவிட்ட நிலையில், தேர்தல் அறிக்கையில் சொல்லிவிட்டோம், விக்கிரவாண்டியில் சொல்லிவிட்டோம் என்ற காரணங்களை மட்டும் முன்வைத்து இந்தத் திட்டத்தை நிராகரிப்பது, அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சியை மிகப்பெரிய அளவில் பாதிக்கும்.

**ஆந்திராவை நோக்கிச் செல்லும் தொழிற்சாலைகள்!**

ஸ்ரீபெரும்புதூர் மட்டுமல்ல; நம்முடைய பகுதிகளைச் சுற்றிப் பார்த்தீர்கள் என்றால், பல்வேறு தொழிற்சாலைகள் ஆந்திராவை நோக்கிச் செல்லக்கூடிய சூழ்நிலைகளும் உருவாகியிருக்கின்றன. ஆந்திர அரசும் ஏற்கனவே அங்கே ஒரு விமான நிலையம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஏற்கனவே ஓசூர் விமான நிலையத்தையும் நாம் இழந்திருக்கிறோம். பெங்களூருவில் இப்போது இரண்டாவது விமான நிலையத்திற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆந்திராவின் குப்பம் பகுதியிலும் விமான நிலையம் வருவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

சுற்றியுள்ள மாநிலங்கள் எல்லாம் விமான நிலையங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்ற நிலையில், ஓசூரில் நமக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் அந்த வாய்ப்பையும் நாம் இழக்கிறோம். இப்போது மீண்டும் பரந்தூரையும் இழந்துவிட்டால், தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சி எங்கே போகும்? நம்முடைய பொருளாதார இலக்கு எங்கே போகும்?

அரசு அறிவித்திருக்கக்கூடிய 1.5 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார இலக்கை இந்த அரசு எப்படி நிறைவேற்றப் போகிறது? அதற்கான ரோட்மேப் என்ன?

ஆகவே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமையக்கூடிய இது போன்ற முக்கியமான திட்டங்களை அரசியல் காரணங்களுக்காகத் தடுத்து நிறுத்தும் போக்கைக் கைவிட வேண்டும். இல்லையென்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் இந்த அரசு துணை நிற்கவில்லை என்பதையே இது வெளிப்படுத்தும்

இவ்வாறு தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.

---

### இந்த நாட்டுக்கே பெரிய கேடான

# த.வெ.க.வை அகற்ற மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்!

## முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேட்டி!

*சென்னை, ஆக.25 -*

*சென்னையில் நேற்று, பொதுக்கூட்டம் ஒன்றில் அரசியல் நாகரிகம் சிறிதுமின்றி தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லயோலா மணி, அநாகரிகமாகப் பேசியதை அடுத்து, தம்மைச் சந்தித்த செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., "இந்த நாட்டிற்கே பெரிய கேடாக அமைந்துள்ள மக்காத குப்பைகளான த.வெ.க.வினரை வருகின்ற காலங்களில்*



*அகற்றுவதற்கு மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்.*

*அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-*

*மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதியை, "குப்பைகள்" என்று சொல்லுகின்ற அளவிற்கு தரம் தாழ்ந்திருக்கின்ற ஒரு அரசியல் சூழல் இன்றைக்கு நிலவிக் கொண்டிருக்கிறது.*

*அவர் கூற்றுப்படியே குப்பை என்றாலும் கூட, இது ஆரோக்கியம் உள்ள மக்கும் குப்பை. மக்கும் குப்பை எப்போதுமே உரமாக அடுத்து பயிர்களுக்கு பயன்படும்; பயிர் விளைச்சலுக்கு பயன்படும். மக்கா குப்பை எதற்கும் பயன்படாது. மற்ற உயிர்களைத் தான் பறிக்கும்.*

*எங்களைப் பொறுத்த அளவில், அவர்கள் சொன்ன பாணியிலேயே சொல்கிறோம்... நாங்கள் குப்பைகள் தான், மக்கும் குப்பைகள்; அவர்கள் மக்கா குப்பைகள். இந்த நாட்டிற்கு பெரிய கேடு. இந்த மக்கா குப்பைகளைத்தான் வருகின்ற காலங்களில் மக்கள் அகற்றுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.*

---

### மோர்தானா அணையை பாசனத்திற்குத் திறக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்,

# பாசனக் கால்வாய்கள் முறையாகத் தூர்வாரப்படாதது கண்டிக்கத்தக்கது!

## கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கை!

*வேலூர், ஆக. 25 -*

*மோர்தானா அணையை பாசனத்திற்குத் திறக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பாசனக் கால்வாய்கள் முறையாகத் தூர்வாரப்படாமலும் சுத்தம் செய்யப்படாமலும் இருப்பதை நான் கடுமையாகவும் உறுதியாகவும் கண்டிக்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினரும் - வேலூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளருமான கதிர் ஆனந்த் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:*

*மோர்தானா அணையை பாசனத்திற்குத் திறக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பாசனக் கால்வாய்கள் முறையாகத் தூர்வாரப்படாமலும் சுத்தம் செய்யப்படாமலும் இருப்பதை நான் கடுமையாகவும் உறுதியாகவும் கண்டிக்கிறேன்.*

*குடியாத்தம் அருகே கௌண்டின்யா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மோர்தானா அணை, வேலூர் மாவட்டத்தின் மிக முக்கியமான பாசன ஆதாரங்களில் ஒன்று. குடியாத்தம், கே.வி.குப்பம், காட்பாடி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு இது உயிர்நாடியாக உள்ளது. இந்த அணைநீர்விவசாயிகளுக்கு ஆடம்பரம் அல்ல—அது அவர்களின்வாழ்வாதாரம்.*

*ஆனால் மீண்டும் ஒரு முறை, விவசாயிகளை காட்டிக்கொடுக்கும் அதே நிர்வாக அலட்சியத்தை நாம் பார்க்கிறோம். நீரைத் திறக்கும் முன்:*

*- முக்கிய கால்வாய், கிளை கால்வாய்கள் மற்றும் வயற்கால்வாய்களின் பல பகுதிகள் அடர்ந்த சேறு, களைகள், புதர்கள் மற்றும் குப்பைகளால் அடைக்கப்பட்டுள்ளன.*

*- ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட தூர்வாரும் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் பல முக்கிய இடங்களில் முழுமையடையாமல் அல்லது சரியாகச் செய்யப்படாமல் உள்ளன.*

*- கடைசி ஏக்கர் வரை நீர் கொண்டு செல்ல வேண்டிய வயற்கால்வாய்கள் இன்னும் புறக்கணிக்கப்பட்டு, புதர் மண்டி, சேறு நிறைந்துள்ளன.*

*- முழு கால்வாய் அமைப்பும் திறம்பட நீரைக் கொண்டு செல்லத் தயாராக உள்ளதா என்பதற்கு எந்த முழுமையான ஆய்வும் சான்றிதழும் இல்லை.*

*இந்த நிலையில் அணையைத் திறப்பது ஆட்சி அல்ல - இது முழு அலட்சியம்.*

*இதன் விளைவுகள் என்னவாக இருக்கும்?*

*1. அணையில் சேமிக்கப்பட்ட விலைமதிப்பற்ற நீர் சேற்றுக்கால்வாய்கள் வழியாக வீணாகும்.*

*2. தலைப்பகுதி விவசாயிகளுக்கு மட்டும் நீர் கிடைத்து, வால்பகுதி விவசாயிகள் மீண்டும் வறட்சியில் தவிப்பார்கள்.*



*3. சேறு மற்றும் புதர் நிறைந்த கால்வாய்கள் உடைந்து, பயிர்கள், வீடுகள் மற்றும் சாலைகள் வெள்ளத்தில் மூழ்கும் ஆபத்து அதிகரிக்கும்.*

*4. ஏற்கனவே விதை, உரம், உழைப்பு ஆகியவற்றில் முதலீடு செய்த விவசாயிகள் பயிர் இழப்பு மற்றும் கடன் சுமையால் பாதிக்கப்படுவார்கள்.*

*5. மோர்தானா அணையைப் பராமரித்து மீட்டெடுத்ததன் நோக்கமே தோல்வியடையும்.*

*இது சாதாரண தொழில்நுட்பப் பிரச்சினை அல்ல. இது வேலூர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தின் மீதான நேரடித் தாக்குதல். அடிப்படை தயாரிப்புப் பணிகளை முடிக்காமல் நீரைத் திறப்பதால் எத்தனை முறை விவசாயிகள் பாதிக்கப்பட வேண்டும்?*

*நான் உடனடி மற்றும் சமரசமற்ற நடவடிக்கைகளைக் கோருகிறேன்:*

*1. மோர்தானா அணை பாசன அமைப்பின் கீழுள்ள முழு கால்வாய் வலையமைப்பையும் - முக்கிய கால்வாய், கிளை கால்வாய்கள், விநியோகக் கால்வாய்கள் மற்றும் வயற் கால்வாய்கள் - முழுமையாகவும் தீவிரமாகவும் தூர்வார வேண்டும்.*

*2. நீர் ஓட்டத்தைத் தடுக்கும் அனைத்து புதர், சேறு, குப்பை மற்றும் ஆக்கிரமிப்புகளையும் அகற்ற வேண்டும்.*

*3. பணிகள் முடிவடைவதற்கான தெளிவான கால அட்டவணையை வெளியிட்டு, வாரம்தோறும் முன்னேற்ற அறிக்கையை உள்ளூர் விவசாயிகள் பிரதிநிதிகளிடம் அளிக்க வேண்டும்.*

*4. நீர் திறப்பதற்கு முன் நீர்வளத்துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் பிரதிநிதிகள் இணைந்து ஆய்வு நடத்த வேண்டும்.*

*5. தாமதத்திற்கும் முழுமையற்ற பணிகளுக்கும் பொறுப்பான அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*நீர்வளத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் வலியுறுத்துகிறேன்: இந்த ஏமாற்று வேலையை உடனே நிறுத்துங்கள். ஒவ்வொரு கால்வாயும் முழுமையாகச் சுத்தம் செய்யப்பட்டு தயாராகும் வரை அணையைத் திறக்க வேண்டாம். வேலூர் விவசாயிகள் வெற்று அறிவிப்புகளையும் பாதி வேலைகளையும் ஏற்க மாட்டார்கள்.*

*இந்த அலட்சியம் தொடர்ந்தால் நான் மௌனமாக இருக்க மாட்டேன். நாடாளுமன்றம் உட்பட அனைத்து அளவிலும் இதனை கடுமையாக எழுப்புவேன். விவசாயிகளுடன் இறுதிவரை நிற்பேன்.*

*மோர்தானா அணையில் சேமிக்கப்பட்டுள்ள நீர் இந்தப் பகுதியின் விவசாயி களுக்குச் சொந்தமானது. அது அவர்களின் வயல்களுக்குச் செல்ல வேண்டும் - அதிகார அலட்சியத்தால் வீணாகக் கூடாது.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

---

### 'நீட்' தேர்வு – உயர்ஜாதியினருக்கான (EWS) இட ஒதுக்கீட்டை முழுமையாக ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி

# திராவிடர் கழகம் சார்பில் - இரு சக்கர வாகனப் பரப்புரை!

## கவிஞர் கலி.பூங்குன்றன் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக.25 - 'நீட்' தேர்வையும், உயர்ஜாதியினருக்கான EWS இடஒதுக்கீட்டையும் முழுமையாக ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி திராவிடர் கழகம் சார்பில் 22.8.2026 முதல் 25.8.2026 வரை நான்கு நாட்கள் நடைபெறும் மாபெரும் இரு சக்கர வாகனப் பரப்புரைப் பயணத்தின் சென்னை முதல் தாம்பரம் வரையிலான முதல் குழுப் பயணத்தை திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்கள் 22.8.2026 அன்று காலை 9 மணியளவில் சென்னை பெரியார் திடலில் தொடங்கி வைத்தார்.**



*'நீட்' தேர்வையும், உயர் ஜாதியினருக்கான EWS இடஒதுக் கீட்டையும் முழுமையாக ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, திராவிடர் கழக இளைஞரணி, திராவிட மாணவர் கழகம், திராவிட மகளிர் பாசறை சார்பில் தமிழ்நாடு, புதுச்சேரி தழுவிய அளவில் மாபெரும் இரு சக்கர வாகனப் பரப்புரைப் பயணம் 22.8.2026 முதல் 25.8.2026 வரை நான்கு நாள்கள் நடைபெறும் என்றும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிவித்தார்.*

*அதன்படி முதல் குழு சென்னை முதல் தாம்பரம் வரை திராவிட மாணவர் கழக விளையாட்டு அணிச் செயலாளர் ம.பூவரசன் தலைமையிலும், இரண்டாம் குழு திருவண்ணாமலை முதல் ஆத்தூர் வரை திராவிட மாணவர் கழக மாநில துணைச் செயலாளர் ச.மணிமொழி தலைமையிலும்,*

*மூன்றாம் குழு திருப்பூர் முதல் கோபிச்செட்டிபாளையம் வரை திராவிட மாணவர் கழக மாநில துணைச் செயலாளர் த.சிவபாரதி தலைமையிலும், நான்காம் குழு திண்டிவனம் முதல் புதுச்சேரி வரை திராவிட மாணவர் கழக துணைச் செயலா ளர் ஆ.அறிவுச்சுடர் தலைமையிலும், அய்ந்தாம் குழு மன்னார்குடி முதல் பட்டுக்கோட்டை வரை மாநில இளைஞரணி இணைச் செயலாளர் அ.ஜெ. உமாநாத் தலைமையிலும், ஆறாம் குழு மதுரை திருமங்கலம் முதல் தென்காசி வரை திராவிட மாணவர் கழக துணைச் செயலாளர் சீ.தேவராஜ்பாண்டியன் தலைமையிலும் நடைபெறுகிறது.*

**சென்னையில்...**

*சென்னை பெரியார் திடலில் 22.8.2026 அன்று காலை 9 மணியளவில் முதல் குழுவினரின் சென்னை முதல் தாம்பரம் வரையிலான மாபெரும் இருசக்கர வாகனப் பரப்புரைப் பயணத்தைத் திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்கள் தொடங்கி வைத்தார். கழகப் பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் கொடியசைத்து வழியனுப்பினார்.*

*இந்த முதல் குழுவிற்கு திராவிட மாணவர் கழக விளையாட்டு அணிச் செயலாளர் ம.பூவரசன் தலைமையேற்றார். மாநில இளைஞரணி துணைச் செயலாளர் மு.அருண்குமார் முன்னிலை வகித்தார். மாநில இளைஞரணி இணைச் செயலாளர் வழக்குரைஞர் சோ.சுரேஷ் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார். திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் வழக்குரைஞர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார் இப்பரப்புரைப் பயணச் சொற்பொழிவாளராக செயல்பட்டார்.*

*முன்னதாக இப்பிரச்சாரப் பயணத்தைத் தொடங்கி வைத்த கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்களுக்கும், கழகப் பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ், திராவிடர் கழக வழக்குரைஞரணித் தலைவர் த.வீரசேகரன் ஆகியோருக்கும் பயனாடை அணிவிக்கப்பட்டது.*

*அதேபோன்று திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார், மாநில இளைஞரணி இணைச் செயலாளர் சோ.சுரேஷ், திராவிட மாணவர் கழக விளையாட்டு அணிச் செயலாளர் ம.பூவரசன் ஆகியோருக்கு கழகப் பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் பயனாடை அணிவித்தார். பிரச்சாரப் பயணம் வெற்றிகரமாக அமைய வாழ்த்துத் தெரிவித்தார்.*

---

### கவிஞர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் – நெல்லை – தூத்துக்குடி மாவட்ட

# 'முரசொலி' முன்னாள் நிருபர் க.மணிகண்டன் இல்லத் திருமண விழா!

## மாவட்டச் செயலாளர்கள் - பொறுப்பாளர்கள் - கழக நிர்வாகிகள் - முன்னோடிகள் பங்கேற்று சிறப்பித்தனர்!

*நெல்லை, ஆக. 25 -*

*கழக துணை பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற நெல்லை தூத்துக்குடி மாவட்ட 'முரசொலி' முன்னாள் நிருபர் க.மணிகண்டன் இல்லத் திருமண விழாவில் மாவட்ட கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கழக உடன் பிறப்புக்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.*

*தமிழினத்தலைவர், செம்மொழி காவலர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், கழக தலைவர், அன்புத் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் கழக துணை பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நெல்லை தூத்துக்குடி மாவட்ட முன்னாள் 'முரசொலி' நிருபர் க.மணிகண்டன் (லேட்) ம.வேலம்மாள் (ஸ்ரீ சங்கரநாராயண சுவாமி திருக்கோவில் முன்னாள் அறங்காவலர் குழு உறுப்பினர்) ஆகியோரது மகள், திருப்பூர், கோவை மாவட்ட முரசொலி நிருபர், திருப்பூர் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் ஒருங்கிணைப்பாளர் க.பழனியப்பன் ப.கமலக்கண்ணா என்னுடைய அண்ணன் மகள், தூத் துக்குடி மாவட்ட முரசொலி நிருபர் ம.பாலாஜி பா. லெட்சுமி பாரதி, அன்புத் தங்கை, திருவளர் நங்கை ம.சிவசங்கரி (எ) முத்து லெட்சுமி, சென்னை. செ.முருகேசன் ரா.எம்மியம்மாள் ஆகியோரின் திருமகன் திருவளர் நம்பி செ. மு.முபேஷ், ஆகியோரது திருமண விழா 23.08.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது. இவ்விழாவில் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு, நெல்லை மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட கழக செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என்.மாலை ராஜா, மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள், மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, பேச்சி பாண்டியன், முன்னாள் மேயர் சரவணன், சங்கரன்கோவில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் முத்துச்செல்வி, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.வி.சுரேஷ், ஒன்றிய கழகச் செயலாளர்கள் சுடலைக்கண்ணு, செல்வ கருணாநிதி, வல்லம் திவான் ஒலி, அருள்மணி, ஜோசப் பெல்சி, மாரியப்பன், அன்பழகன், சேக் முகம்மது, நகர கழக செயலாளர்கள் சாதிர், கணேசன், மாவட்ட வழக்கறிஞர் அமைப்பாளர் செல்வ சூடாமணி, மகளிர் அணி அமைப்பாளர் மகேஸ்வரி, மாமன்ற உறுப்பினர்கள் கந்தன், ஜூலியட் மேரி, வழக்கறிஞர் சேக் முஜிபுர் ரகுமான், வத்திராயிருப்பு மீ.மீனாட்சி சுந்தரி, நெல்லை, தென்காசி மாவட்ட முரசொலி நிருபர் சு.கோமதிநாயகம், திருப்பரங்குன்றம், கா.காளீஸ்வரமூர்த்தி, சங்கரன்கோவில் சு.சீத்தாராமன், கோவை முரசொலி ப.விஷால், நாகர்கோவில் மு.ரோகித் உள்பட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் இந்நாள், முன்னாள் பிரதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கழக உடன் பிறப்புக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.*

---


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை. கலியமூர்த்தி
### ஆகஸ்ட் 25 (1989)



பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பரங்கிப்பேட்டை, சிதம்பரம் பகுதிகளில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

பரங்கிப்பேட்டை ஒன்றியச் செயலாளராக மூன்று முறையும், சிதம்பரம் நகரச் செயலாளராக இரண்டு முறையும் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு, மொழிப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை மறியல் போன்ற போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1977ல் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும் – 1986ல் சிதம்பரம் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.